DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, COIMBATORE.

| | |
|---|---|
| Calendar | } CC. 1394/2020 PW 11 (LW 12 ) |
| Preliminary Register | } |
| Name | } ராஜேஷ்வரி |
| Taluk | } |
| Village | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the day or
**Date 05.10.2023**

1,ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 2ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யபட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது காவல் துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று கோவையில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 08.07.2020ம் தேதியன்று நான் கோவை அனைத்து மகளிர் காவல் நிலையம் மத்தியத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது மேற்படி தேதியன்று நிலைய பொறுப்பிலிருந்த உதவி ஆய்வாளர் சவுபர்ணிகா என்பவரிடம் ஜீவா என்பவர் நிலையம் ஆஜராகிக்கொடுத்த எழுத்துப்பூர்வமான புகார் மனுவினைப்பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.5/2020 சட்டப்பிரிவுகள் 498(ஏ), 506(2) இதசவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்கு என் பார்வைக்கு வைத்தார். முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகாருடன் இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். **(முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2) ஒரு நகலை அன்றைய தேதியே நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜீவா, நாகராஜ், மயிலம்மாள், ஜான்சிராணி, கவிதா ஆகியோர்களை விசாரித்து சம்பவம் நடந்தது உண்மை என தெரிய வந்ததால் நிலையம் வந்தும், நிலைய ஆஜரில் இருந்த எதிரி சிவக்குமாரை 16.00 மணிக்கு கைது செய்து நீதிமன்றக்காவலுக்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகள் தம்புராஜ், கலையரசன், சிலம்பரசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மற்றும் செட்டிபாளையம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அருள்பிரகாஷ், முருகேசன் உதவி ஆய்வாளர் சவுபர்ணிகா ஆகியோர்களை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், புலன் விசாரணையிலும் வேலுமணியை எதிரியாக சேர்த்தது தொடர்பாக அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(2 ம் எதிரி சேர்க்கப்பட்டதற்கான சிறப்பு அறிக்கை அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து 10.08.2020 ம் தேதியன்று எதிரிகள் மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரை உள்ள நபர்கள் அசா1 ன் உறவினர்கள் என்றால் சரிதான். வழக்கின் புகாருக்கு முதலில் சிஎஸ்ஆர் போடப்பட்டது என்றால் சரிதான். சிஎஸ்ஆரின் போது 1 ம் எதிரி அசா1 உடன் சேர்ந்து வாழத் தயாராக இருந்ததாக சொல்லிய விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1 ம் எதிரி சேர்ந்து வாழ தயாராக இருந்ததாக சொல்லிய பின்பு மறுநாள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதென்றால் சரியல்ல. செட்டிபாளையம் காவல் நிலையத்தில் வாய்மொழியாகத்தான் புகார் கொடுத்திருந்தார். அசாஆ.2 புகைப்படம் 2 ம் எதிரியால் அசா1 க்கு அனுப்பப்பட்டதாகச்சொல்லி ஆஜர்படுத்தினார்.

2) எந்த செல்போனில் இருந்து எந்த தேதியில் அனுப்பப்பட்டது என்பதை புலன் விசாரணையின் போது தெரிந்து கொள்ளவில்லை. அசா1 அவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக மருத்துவமனையில் சிகிச்சை எதுவும் எடுத்துக்கொண்டாரா என்றால் இல்லை. மருத்துவமனையில் எதுவும் சேர்ந்து சிகிச்சை பெறவில்லை. 2 ம் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரணை செய்யவில்லை. 1 ம் எதிரி சேர்ந்து வாழ தாயாராக இருந்ததாகச்சொல்லி உள்ள நிலையில் வாதியின் தூண்டுதலின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதென்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.